நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## "தரமான விதை உற்பத்தியை அதிகரிக்க அரசு திட்டம்'

First Published : 04 Jun 2012 08:13:52 AM IST

கோவை, ஜூன் 3: தரமான விதை உற்பத்தியை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டு அரசு செயல்பட்டு வருகிறது என்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ப.சுப்பையன் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வருடாந்திர விதை கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு, வருடாந்திர விதை கருத்தரங்கு கையேட்டை வெளியிட்டு, பல்கலைக்கழக பதிவாளர் ப.சுப்பையன் பேசியது:

நமது நாட்டின் விதைத் தேவையான 48 லட்சம் டன்னில் 37 சதவிகிதம் மட்டுமே, பொது மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்படுகிறது.

எஞ்சிய விதைத் தேவையை விவசாயிகள் தங்களின் விதை சேமிப்பில் இருந்தே பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக தமிழகத்தின் விதைத் தேவையான 2.56 லட்சம் டன்னில் 24 சதவிகிதம் மட்டுமே பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதனால் 76 சதவிகிதம் விதைத் தேவையில் இடைவெளி இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டி உள்ளது.

குறிப்பாக தோட்டக்கலைப் பயிர்களை விட வேளாண் பயிர்களிலேயே விதைத் தேவை அதிகமாக உள்ளது. இதற்காக மாநில அரசு தரமான விதை உற்பத்தியை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

சீனாவில் 400 மில்லியன் டன் உணவு தானியம், 100 மில்லியன் எக்டேரில் இருந்து பெறப்படுகிறது. ஆனால், இந்தியாவில் 250 மில்லியன் டன் உணவு தானியம் 140 மில்லியன் எக்டேரில் இருந்து பெறப்படுகிறது. சீனாவின் உற்பத்திப் பெருக்கத்திற்கு, வீரிய ஒட்டு விதைகளைப் பயன்படுத்துவதே காரணமாகும்.

இந்தியாவில் 44 மில்லியன் எக்டேர் நெல் சாகுபடி பரப்பளவில் 6 சதவிகிதம் மட்டுமே வீரிய ஒட்டு நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசும் 2015-க்குள் வீரிய ஒட்டு விதை உற்பத்தி பரப்பை 25 சதவிகிதம் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது என்றார்.

கருத்தரங்கில் ராசி விதைகள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ராமசாமி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (தோட்டக்கலை) முதல்வர் குமார், பயிர் மேலாண்மை இயக்குநர் ஜெயராமன், விதை ஆய்வு இணை இயக்குநர் எ.கோபால் உள்பட பலர் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**தேவை குறைந்ததால் மிளகாய் வற்றல் விலை சரிவு**

ஜூன் 04,2012,00:55

கொச்சி:உள்நாட்டில், மிளகாய் வற்றலுக்கான தேவை குறைந்துள்ளது. இதனால், இதன் விலை Œரிவடைந்துள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவித்தனர்.பாகிஸ்தான்:இருப்பினும், நடப்பாண்டில், பாகிஸ்தானில், மிளகாய் உற்பத்தி குறைந்துள்ளதால், இதன் விலை உயர வாய்ப்புள்ளது என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அறுவடை மூலம் சந்தைக்கு, புதிய மிளகாய் வற்றல் வரத்து எந்த அளவிற்கு வருகிறது என்பதை பொறுத்து, இதன் விலை இருக்கும். தற்@பாது உள்நாட்டில், ஒரு குவிண்டால் மிளகா# வற்றல் விலை 5,100 முதல் 5,600 ரூபா# வரை உள்ளது. பாகிஸ்தான் தவிர்த்த, இதர நாடுகளில், மிளகாய் வற்றலுக்கான தேவை குறைந்துள்ளது. இதனால், ஒட்டுமொத்த அளவில், இதன் ஏற்றுமதி, சற்று குறைந்துள்ளது. இந்நிலையில், சீனாவில், இதன் உற்பத்தி, அந்நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கே உள்ளது. இதனால், அந்நாட்டின் மிளகாய் வற்றல் ஏற்றுமதி எதிர்பார்த்த அளவிற்கு இருக்காது என, கொச்சியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவாக, ஏற்றுமதி அதிகரிக்கும் நிலையில், இதன் விலை, உள்நாட்டு சந்தையில் உயரும். ஆனால், நடப்பாண்டில், சர்வதே சந்தையில், மிளகாய் வற்றலுக்கான தேவை குறைந்துள்ளது. இருப்பினும், முந்தைய இரண்டு ஆண்டுகளில், சீனாவில், இதன் உற்பத்தி குறைந்து போனதால், நாட்டின் மிளகாய் வற்றல் ஏற்றுமதி நன்கு இருந்தது.

உற்பத்தி:நடப்பு 2011-12ம் பருவத்தில், உள்நாட்டில், மிளகாய் வற்றல் உற்பத்தி, 11 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், கடந்த பருவத்தில், இதன் உற்பத்தி, 9-10 லட்சம் டன் என்றளவில் தான் இருந்தது.

சென்ற நிதியாண்டின், முதல் 10 மாதங்களில், மிளகாய் வற்றல் ஏற்றுமதி, 1 லட்சத்து 69 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது. அதேசமயம், இதற்கு முந்தைய 2010-11ம் நிதியாண்டின் இதே காலத்தில், இதன் ஏற்றுமதி, 2 லட்சத்து 5 ஆயிரம் டன்னாக இருந்தது. இருப்பினும், இதே

காலத்தில்,
மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 26 சதவீதம் உயர்ந்துள்ளது என, நறுமண பொருட்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில், ஏற்றுமதியின் பங்களிப்பு, 15-17 சதவீதம் என்றளவில் உள்ளது. உள்நாட்டில், விளையும் மொத்த மிளகாயில், பெரும்பகுதி, உள்நாட்டிலேயே பயன்படுத்தப்படுகிறது.இந்நிலையில், உள்நாட்டில் இதற்கான தேவை அதிகரிக்கவில்லை. இதனால் தான், இதன் விலை உயரவில்லை என கூறப்படுகிறது.
உள்நாட்டில்காய் சாகுபடி செய்யும் பரப்பளவில், அதிக மாற்றம் இன்றி உள்ளது.
ஒட்டுமொத்த அளவில், உள்நாட்டு தேவையை விட, இதன் அளிப்பு, 30 சதவீதம் அதிகமாக உள்ளது.

## பருத்தி சாகுபடி பரப்பு 10 சதவீதம் குறையும்

ஜூன் 04,2012,00:48

புதுடில்லி:நாட்டின் பருத்தி சாகுபடி பரப்பளவு, வரும் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), 10 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது என, இந்திய பருத்தி கழகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சென்ற 2010-11ம் பருவத்தில், 1.11 கோடி ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டிருந்தது. இது, நடப்பு 2011-12ம் பருவத்தில், 1.22 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதனால், கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில் பருத்தி உற்பத்தி சிறப்பாக அதிகரித்துள்ளது.
இந்நிலையில், மத்திய அரசின் தெளிவற்ற ஏற்றுமதி கொள்கை, குறைந்தபட்ச கொள்முதல் விலை அறிவிப்பதில் தாமதம், கூலி உயர்வு, வட மாநிலங்களில் வறண்ட மற்றும் அதிக வெப்ப நிலை போன்ற காரணங்களால், வரும் பருவத்தில், பருத்தி சாகுபடி பரப்பளவு, நடப்பு பருவத்தை விட, 10 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இதையடுத்து, பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநில விவசாயிகள், பருத்தி பயிரிடுவதை தவிர்த்து, நெல், கொத்தவரை, பருப்பு வகைகள், கரும்பு உள்ளிட்ட இதர பயிர் சாகுபடியில், கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர். இதனால், இம்மாநிலங்களில், கணிசமான அளவிற்கு, இதன் சாகுபடி பரப்பு குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.சென்ற 2010-11ம் பருவத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 78 லட்சம் பொதிகள் (1 பொதி-170 கிலோ) என்றளவில் இருந்தது. நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி சிறப்பாக உள்ளதால், இதுவரையிலுமாகவே இதன் ஏற்றுமதி, 1.20 கோடி பொதிகளை தாண்டியுள்ளது.அண்மையில், மத்திய வேளாண் அமைச்சகம், வரும் பருவத்திற்கு, ஒரு குவிண்டால் பருத்திக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையாக, 3,600-3,900

வழங்க பரிந்துரை செய்துள்ளது. நடப்பு பருவத்தில், இதற்கான விலை, 2,200-3,300 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்தது**

ஜூன் 03,2012,15:47




பொங்கலூர்:மஞ்சள் விலை கடும் வீழ்ச்சியடைந்ததால், நஷ்டமடைந்த விவசாயிகள்; இந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். பொங்கலூர் வட்டார பகுதியில், ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஓராண்டுப் பயிரான மஞ்சள் வைகாசி பட்டத்தில் சாகுபடி செய்து, தை மாதத்தில் அறுவடை செய்கின்றனர். தற்போது, மஞ்சள் சாகுபடி சீசன் துவங்கியுள்ளது.

ஆனால், மஞ்சள் சாகுபடியில் விவ சாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.கடந்த 2010 ல் ஒரு குவிண்டால் 18,000 ரூபாய்க்கு விற்பனையானது. இது கடந்தாண்டு 7,000 ரூபாயாகவும், இந்த ஆண்டு 3,500 ரூபாயாகவும் விலை சரிந்துள்ளது.
கடந்த சீசனில் மஞ்சள் பயிரில், இலைப்பேன் தாக்குதல் ஏற்பட்டதால், மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது.
மகசூல் பாதிப்பு மற்றும் விலை வீழ்ச்சியால், விவசாயிகள் மஞ்சளுக்கு போட்ட முதலீட்டைக்கூட எடுக்க முடியாமல் கடும் நஷ்டத்தை சந்தித்தனர்.

எனவே, இந்த ஆண்டும் விலை உயர வாய்ப்பில்லை என்ற அச்சம் காரணமாக, மஞ்சள் சாகுபடி செய்வதை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர்.

## நடப்பு 2012-13ம் நிதி ஆண்டில் உணவு பொருட்களுக்கான மானிய சுமை ரூ.1 லட்சம் கோடியாக உயரும்

ஜூன் 03,2012,01:09




புதுடில்லி:நடப்பு 2012-13ம் நிதியாண்டில், மத்திய அரசின், உணவுப் பொருட்களுக்கான, மானியச் சுமை, மதிப்பிட்டை விட, 1 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, இதுவரை இல்லாத மிகவும் அதிகபட்ச அளவாகும் என, தெரியவந்துள்ளது.கொள்முதல்மத்திய அரசு, விவசாயிகளின் நலன் கருதி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், உணவு தானியங்களை கொள்முதல் செய்வதற்கான, குறைந்தபட்ச ஆதரவு விலையைத் தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

அதேசமயம், அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்படும் முக்கிய உணவு தானியங்களை, மத்திய அரசு, பொது வினியோகத் திட்டத்தின் கீழ், குறைந்த விலைக்கு வழங்குகிறது. இவ்விரு விலைக்கும் உள்ள இடைவெளி அதிகரிப்பால், அரசின் உணவுப் பொருட்களுக்கான மானியச் சுமை உயர்ந்து வருகிறது.

இதுகுறித்து மத்திய உணவு அமைச்சர் தாமஸ் கூறியதாவது:நடப்பு 2012-13ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், உணவுப் பொருட்கள் மானியத்திற்காக, 74 ஆயிரத்து 551 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற நிதியாண்டிற்கு, இதற்கான மானிய ஒதுக்கீடு, 72 ஆயிரத்து 370 கோடி ரூபாயாக இருந்தது.


@காதுமை:இந்நிலையில், கோதுமை மற்றும் நெல் கொள்முதல், மிகவும் அதிகரித்துள்ளது. இதற்கான செலவினத்துடன், இவற்றை இருப்பு வைப்பதற்கான செலவினமும் உயர்ந்துள்ளதால், மத்திய அரசின் உணவு மானியச் சுமை, பன்மடங்கு உயர்ந்துள்ளது.நடப்பு ரபி சந்தைப்படுத்தும் பருவத்தில், மத்திய அரசு, 3.18 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது.

ஆனால், இதுவரையிலுமாகவே, 3.30 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்திற்குள், இது, 3.50 கோடி டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
நடப்பு பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு, 9 கோடி டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கடந்த வேளாண் பருவத்தில், மத்திய அரசின் முகமை அமைப்பான, இந்திய உணவுக் கழகம், விவசாயிகளிடமிருந்து, கொள்முதல் செய்த கோதுமையின் அளவு, 2.80 கோடி டன் என்றளவில் தான் இருந்தது. இவ்வாறு அமைச்சர் தாமஸ் கூறினார்.
ஆதரவு விலை:மத்திய அரசு, விவசாயிகளிடமிருந்து, உணவு தானியங்களை, அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையில், கொள்முதல் செய்கிறது. அதேசமயம், முக்கிய உணவு தானியங்களை மத்திய அரசு, மாநில பொது வினியோகத் திட்டத்தின் கீழ் குறைந்த விலையில், விற்பனை செய்கிறது.
இதனால், அரசுக்கு, இழப்பு ஏற்படுவதுடன், மானியச் சுமையும் அதிகரிக்கிறது.தற்போது, மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்கு கீழ், 6 கோடியே 52 லட்சம் குடும்பங்களுக்கு, மானிய விலையில், அரிசி மற்றும் கோதுமையை வழங்கி வருகிறது.
மேலும், சராசரி வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும், 8 கோடி குடும்பங்களுக்கு மிக குறைந்த விலையில், இவற்றை வழங்குகிறது.
தானிய கையிருப்பு:இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில முகமை அமைப்புகள், மிக அதிகளவில், தானியங்களைக் கொள்முதல் செய்துள்ளதால், நடப்பாண்டு மே மாத துவக்கத்தில், தானிய கையிருப்பு, இதுவரை இல்லாத அளவாக, 7.10 கோடி டன்னாக மிகவும் அதிகரித்துள்ளது.
இந்தக் கையிருப்பு, நேற்றைய நிலவரப்படி, 7.40 கோடி டன்னாக அதிகரித்திருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
தற்போது, உணவு தானியங்களை கையிருப்பில், வைப்பதற்கு, இடம் இல்லாத சூழ்நிலை உருவாகி உள்ளது என, அரசு துறையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் கூறினார்.
மத்திய அரசின், கையிருப்பில் உள்ள தானியங்களின் அளவு அதிகரித்துள்ளது என்பது, இதுவரை காணாத அளவாகும்.
இருப்பினும், விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு, உணவு தானியங்களை தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது என, அமைச்சர் தாமஸ் கூறினார்.

## நாட்டின் காபி ஏற்றுமதி 34,415 டன்னாக குறைந்தது

ஜூன் 03,2012,01:05



புதுடில்லி:நடப்பு 2012ம் காலண்டர் ஆண்டின், சென்ற மே மாதத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, 34 ஆயிரத்து 415 டன்னாக குறைந்துள்ளது என, காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரிவு:கடந்த ஆண்டு மே மாதத்தில், காபி ஏற்றுமதி, 38 ஆயிரத்து 459 டன் என்றளவில் உயர்ந்து காணப்பட்டது. ஆக, இடைப்பட்ட காலத்தில், இதன் ஏற்றுமதி, 11 சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு 2012-13ம் நிதியாண்டின் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களில், காபி ஏற்றுமதி, முந்தைய ஆண்டின் இதே காலத்தை விட, 6 சதவீதம் குறைந்து, 76 ஆயிரத்து 389 டன்னிலிருந்து, 72 ஆயிரத்து 50 டன்னாக குறைந்துள்ளது.கணக்கீட்டு காலத்தில், காபி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 3 சதவீதம் உயர்ந்து, 1,038 கோடியிலிருந்து, 1,070 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அதேசமயம், டாலர் மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி, 10 சதவீதம் குறைந்து, 23.32 கோடி டாலரிலிருந்து, 21 கோடி டாலராக குறைந்துள்ளது.நடப்பு காலண்டர் ஆண்டின் ஜனவரி முதல் மே வரையிலான, ஐந்து மாத காலத்தில், இதன் ஏற்றுமதி, 1 லட்சத்து 74 ஆயிரத்து 542 டன்னிலிருந்து, 1 லட்சத்து 73 ஆயிரத்து 358 டன்னாக குறைந்துள்ளது.

ரோபஸ்டா வகை காபி இதில், அரபிகா வகை காபி ஏற்றுமதி, 37 ஆயிரத்து 43 டன்னிலிருந்து, 35 ஆயிரத்து 275 டன்னாகவும், ரோபஸ்டா வகை காபி ஏற்றுமதி, 97 ஆயிரத்து 589 டன்னிலிருந்து, 96 ஆயிரத்து 693 டன்னாகவும் குறைந்துள்ளது.நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), அக்டோபர் முதல் மே வரையிலான எட்டு மாத காலத்தில், இதன் ஏற்றுமதி, 4 சதவீதம் குறைந்து, 2 லட்சத்து 39 ஆயிரத்து 758 டன்னிலிருந்து, 2 லட்சத்து 30 ஆயிரத்து 883 டன்னாக குறைந்துள்ளது என, காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.

## மா சாகுபடிக்கு மானியம்: புதிய தலைமுறை விவசாயிகளுக்கு முன்னுரிமை

ஜூன் 04,2012,00:58



தமிழகத்தில் மா சாகுபடிக்கு மானியம் வழங்குவதில், புதிய தலைமுறை விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்க தோட்டக்கலை ஆணையம் முடிவு செய்துள்ளது. இதனால், இதன் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் முக்கிய பழவகைகளில் ஒன்றாக மாம்பழம் உள்ளது. தட்பவெட்ப மாறுதல்களைத் தாங்கி வளரக் கூடிய மாம்பழம், மார்ச்-ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. பழ வகைகளின் ராணி:பழச்சாறு ஜெல்லி, பழக்கூழ் மற்றும் ஊறுகாய் போன்ற பல வகை உணவுப் பொருட்கள் தயாரிக்க மாம்பழம் பயன்படுகிறது. வைட்டமின்,"ஏ' சத்து நிறைந்த "மா', பழ வகைகளின் ராணி என்று அழைக்கப்படுகிறது.

இந்திய அளவில், 23 லட்சம் ஹெக்டேரில் ஆண்டுக்கு, 1.50 கோடி டன் மாம்பழம் உற்பத்தியாகிறது. நாட்டின் மொத்த மா சாகுபடி பரப்பளவில், தமிழகத்தின் பங்களிப்பு, 6.5 சதவீதம் என்றளவிலும், மாம்பழம் உற்பத்தியில், 4.5 சதவீதம் என்றளவிலும் உள்ளது. தமிழகத்தில், ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக, 5,000 கிலோ மாம்பழம் உற்பத்தியாகிறது. தமிழகத்தில், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திண்டுக்கல், வேலூர், திருவள்ளூர், தேனி, சேலம் ஆகிய மாவட்டங்களில், அதிகளவில் மாம்பழம் விளைகிறது. இங்கு, பெங்களூரா, செந்தூரா, ஹிமாயுதின், அல்போன்சா, பங்கனபள்ளி, ருமானி, தோட்டா பூரி போன்ற மாம்பழ வகைகள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன.

கிருஷ்ணகிரி:மாநிலத்தின் ஒட்டுமொத்த மா சாகுபடியில், கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. இங்கு, 42 ஆயிரம் ஹெக்டேரில், 4 லட்சம் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரியில், ஓர் ஆண்டுக்கு, சராசரியாக, 1.75 லட்சம் டன் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 46 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில், விளையும் மாம்பழங்கள், வங்கதேசம், பஹ்ரெய்ன், பிரான்ஸ், குவைத், மலேசியா, நேபாளம், சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும், மாம்பழம் மற்றும் அதன் துணை பொருட்கள் ஏற்றுமதி மூலம், நம் மாநில விவசாயிகளுக்கு, 250 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது.தமிழகத்தில், மாம்பழம் உற்பத்தியைப் பெருக்கவும், மா சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிக்கவும், தோட்டக்கலைத்

துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு தோட்டக்கலை பண்ணைகள் மூலம், ஒரு ஒட்டு மா செடி, 25 மற்றும் 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
மானிய உதவி:மாநில தோட்டக்கலை துறை, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி என்ற திட்டத்தின் கீழ், 50 சதவீத மானிய விலையில், ஒட்டு மா செடிகளை குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. ஒரு பயனாளிக்கு, ஒரு ஹெக்டேர் பரப்பளவிற்கான மா செடிகள் வழங்கப்படுகின்றன.
மேலும், தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு, நான்கு ஹெக்டேர் பரப்பளவிற்கு, மா ஒட்டுச் செடிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
நடவு செய்த பின், இரண்டு ஆண்டுகளுக்கு இயற்கை உரங்கள், ரசாயன உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களுக்காக, முதல் ஆண்டிற்கு,
24 ஆயிரம் ரூபாயும், இரண்டாவது ஆண்டிற்கு, 8,000 ரூபாயும் மானியம் வழங்கப்படுகிறது.
கடந்த 2010-11 மற்றும் 2011-12ம் ஆண்டுகளில், தோட்டக்கலை இயக்ககத்தின் மூலம், அரசு தோட்டக்கலை பண்ணைகளிலிருந்து, 4,410 ஹெக்டேர் பரப்பளவிற்கு, 12 லட்சத்து 79 ஆயிரம் மா ஒட்டுச் செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
நடப்பாண்டில், வழங்கப்படும் மானியத்தில், புதிய தலைமுறை விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட உள்ளது. இதையடுத்து, 2012-13ம் ஆண்டில், மாநிலத்தின் மா சாகுபடி பரப்பு, 1.70 லட்சம் ஹெக்டேராக உயரும். இதையடுத்து, மாம்பழம் உற்பத்தி, 10.58 லட்சம் டன்னாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
@நரடி பயன்:இதுகுறித்து தோட்டக்கலை ஆணையர் டாக்டர் சந்தோஷ்பாபு கூறியதாவது: தமிழகத்தில் உள்ள, 56 தோட்டக்கலை பண்ணைகள் மூலம், மா ஒட்டு செடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதை, விவசாயிகள் நேரடியாக வாங்கி பயன்பெறலாம். நடப்பாண்டில், மா சாகுபடிக்கு வழங்கப்படும் மானியத்தில், புதிய தலைமுறை விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்கள், மாவட்ட அளவில் உள்ள, மாவட்டத் தோட்டக்கலை துணை இயக்குனரைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.- வீ.அரிகரசுதன்

## வாழை இலை விலை 5 ரூபாயாக அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டூர்: மேட்டூரில், ஒரு வாழை இலை, ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்களும், ஹோட்டல் உரிமையாளர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் சுற்றுப்பகுதியில் உள்ள தண்டா, தார்க்காடு, ஏழரைமத்திகாடு, செட்டியூர், கண்ணாமூச்சி, பூமனூர் பகுதியில் வாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இரண்டு வாரங்களுக்கு முன், கொளத்தூர் பகுதியில் பரவலாக சூறை காற்று வீசியது. சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. சூறைகாற்றில் வாழை மரங்களில் உள்ள இலைகள் கிழிந்து சேதமடைந்து விட்டதால், தரமான இலைகள் கிடைப்பது அரிதாக விட்டது. அதனால், இரண்டு வாரங்களாக இப்பகுதியில் வாழை இலைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வரத்து குறைந்ததால், மேட்டூரில் ஒரு மாதத்துக்கு முன் ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை விற்ற வாழை இலை, கடந்த இரண்டு நாட்களாக ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வாழை இலைக்கு மட்டுமே ஐந்து ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளதால், மேட்டூரில், பல ஹோட்டல்களில் வாழை இலைக்கு பதிலாக, பிளாஸ்டிக் காகிதத்தில் உணவு பறிமாறப்பட்டது. மரங்களில் புதிய இலைகள் துளிர் விட்டால் மட்டுமே சந்தைக்கு வாழை இலைகள் வரத்து அதிகரிக்கும். அதுவரை பற்றாக்குறை நீடிக்கும், என வாழை விவசாயிகள் தெரிவித்தனர்.

## மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு : விவசாயிகள் ஏமாற்றம்

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டதால், விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

அதன்படி, நேற்று முன்தினம் நடக்க இருந்த மஞ்சள் ஏலத்துக்கு, வெளி மாவட்டம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதியை சேர்ந்த விவசாயிகள், 1,200க்கும் மேற்பட்ட மஞ்சள் மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில், ஈரோட்டைச் சேர்ந்த மஞ்சள் வியாபாரி ஒருவரின் மனைவி திடீரென இறந்ததால், ஒட்டுமொத்த மஞ்சள் வியாபாரிகளும், ஏலத்தில் கலந்து கொள்ளாமல், துக்க நிகழ்ச்சிக்கு சென்றனர்.

அதனால், நேற்று முன்தினம் நடக்க இருந்த மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது. அதனால், விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## விதை விற்பனை நிலையத்தில் துணை இயக்குனர் திடீர் ஆய்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,01:56 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: ராசிபுரம் அருகே உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களில், விதை ஆய்வு துணை இயக்குனர் தலைமையிலான அதிகாரிகள், திடீர் ஆய்வு செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம், திருச்செங்கோடு, எலச்சிபாளையம், வையப்பமலை பகுதிகளில், தனியார் மற்றும் அரசு விதை விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளது. அந்த கடைகளில், விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் தலைமையிலான விதை ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, காரீப் பருவத்திற்கு தேவையான விதை இருப்பு உள்ளதா, அதன் கொள்முதல் ஆதாரம், இருப்பு பதிவேடு பராமரித்தல், விற்பனை பட்டியல் வழங்குதல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், விதை உட்பட விற்பனை செய்யப்படும் அனைத்திற்கும் ரசீது அவசியம் வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. விதை தொடர்பாக, எந்தவொரு குறைபாடும் கண்டறியப்பட்டால், சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆய்வின்போது, வேளாண் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## மானிய விலையில் மழைத்தூவி கருவி

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,01:56 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானிய விலையில், மழைத்தூவி கருவி வழங்கப்படுகிறது' என, மாவட்ட கலெக்டர் (பொறுப்பு) செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நீர்பாசன மேலாண்மையில், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில், விவசாயிகளுக்கு மழைத்தூவி கருவி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011-2012ம் ஆண்டு, நாமக்கல் மாவட்டத்தில், 101 மழைத்தூவி கருவிகள் வழங்க உத்தரவு பெறப்பட்டது. இதில், 36 சிறு, குறு விவசாயிகளும், 65 இதர விவசாயிகளும் பயடைந்துள்ளனர்.

அதன்படி, 36 சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானிய விலையிலும், 65 பிற

விவசாயிகளுக்கு, 75 சதவீத மானிய விலையிலும், 12 லட்சத்து 18 ஆயிரத்து 750 ரூபாய்க்கு கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிர்கள் காய்ந்து நஷ்டம் ஏற்படும் அபாயம்

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,01:50 IST

மோகனூர்: வாய்க்காலில், கடைமடை வரை தண்ணீர் வரத்து குறைந்ததால், மோகனூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை, கரும்பு, வெற்றிலைக் கொடிகால் போன்ற பணப்பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை உள்ளது.
மோகனூர் வாய்க்கால், நன்செய் இடையாறில் துவங்கி, ஒருவந்தூர்புதூர் வரை, 21 கி.மீ., தூரத்துக்கு பாய்ந்து செல்கிறது. அதன் மூலம் அப்பகுதியில் உள்ள, 3,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இங்கு, வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், நெல் போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.
மேட்டூர் அணை அடைப்பு காலத்தில், வாய்க்கால் தண்ணீர் நிறுத்தப்பட்டு, தூர் வாரப்படும். ஒரு மாதம் கழித்து, மீண்டும் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். அதன்படி, கடந்த மார்ச் 17ம் தேதி, வாய்க்கால் தூர்வாரப்பட்டு, தண்ணீர் திறந்து விடப்பட்டது.
தற்போது, இந்த வாய்க்கால், ராஜ வாய்க்கால் மூலம் கூடுதல் தண்ணீர் பெற்று, குமாரபாளையம் வாய்க்கால் வழியாக, மோகனூர் தலைப்பு மதகுக்கு தண்ணீர் வருகிறது.
இச்சூழ்நிலையில், மின் தட்டுப்பாடு காரணமாக நீரேற்று பாசன பம்ப் செட்டுகள் சரிவர இயங்காததால், ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் கிடைத்து வந்தது.

தற்போது, மின் தட்டுப்பாடு சீர் செய்யப்பட்டுள்ள நிலையில், மின்சார பம்ப் செட்டுகள் இயங்கி வருவதால், கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்லாமல், பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.
பேட்டப்பாளையம் முதல் ஒருவந்தூர் வரை, 1,200 ஏக்கர் பாசன பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு, வாழை, நெல், வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
மேட்டூர் அணை அமைப்பு காலத்தில், முறையற்ற பாசன பம்ப் செட்டுகள் இயங்க அனுமதி இல்லாத நிலையில், மின் துறை அதிகாரிகள் கண்டும், காணாமல் இருந்ததால், அதிக அளவில் நீர் உறிஞ்சி வருகின்றனர். அதன் காரணமாக, ஆயக்கட்டு பாசன பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஆள் பற்றாக்குறையாலும், அதிக வெப்பத்தின் தாக்கத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள வாழை, கரும்பு, நெற்பயிர், வெற்றிலைக் கொடிகால் போன்ற பயிர்கள், தண்ணீர் தட்டுப்பாடு

காரணமாக காய்ந்து, விவசாயிகள் நஷ்டம் அடையும் சூழ்நிலை உள்ளது. மேலும், டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் சாக்கடை கழிவுநீர், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர கழிவுகளால் பாசன வாய்க்கால் சாக்கடையாக காட்சி அளிக்கிறது.

அதன் காரணமாக தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. "மோகனூர் வாய்க்கால் கடைமடை பகுதியில் தண்ணீர் தடையின்றி கிடைக்க வழிவகை செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறை சரபங்கா கோட்ட அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பசுந்தீவனம் வளர்க்க மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,01:46 IST

திருப்பூர்: திருப்பூர் மாவட்டத்தில் விவசாயிகள், பசுந்தீவனம் வளர்க்க, 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அறிக்கை: தமிழகத்தில் வெண்மை புரட்சிக்கு வித்திடும் வகையில், ஏழைகளுக்கு தமிழக அரசு பசு மாடுகள் வழங்கி வருகிறது. கால்நடைகளின் உற்பத்தி திறனை அதிகரிக்க, பசுந்தீவனம் அவசியம். இதை உற்பத்தி செய்ய, கடந்தாண்டு, 8,000 ஏக்கர் பரப்பளவில் அதிக மகசூல் அளிக்கும் புரதச்சத்துமிக்க தீவனங்கள் சாகுபடி செய்ய, விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியம் வழங்கப்பட்டது. இதன் மேலாண்மைக்காக, 320 ஏக்கருக்கு மானியம் வழங்கப்பட்டது.

அதேபோல், நடப்பாண்டும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 750 ஏக்கர் பரப்பில், அதிக மகசூல் தரும் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகங்கள், கோ-3 அல்லது கோ - 4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். விவசாயிகள், தங்கள் பகுதி கால்நடை நிலைய உதவி மருத்துவரிடம் விண்ணப்பிக்க வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

## காய்கறிகள் வரலாறு காணாத விலையேற்றம்

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,01:44 IST

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை, வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

ஈரோட்டுக்கு தாளவாடி மற்றும் மேட்டுப்பாளையம் மண்டியில் இருந்து இங்கிலீஷ் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், நாமக்கல் மாவட்டம் சேவூர்,

கொக்கராயன்பேட்டை, கோபி, அந்தியூர் பகுதிகளில் இருந்து, நாட்டு காய்கறிகள், பொள்ளாச்சி, உடுமலை, தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு, ராயக்கோட்டை பகுதியில் இருந்து, தக்காளி, வெங்காயம் ஆகியவை வருகிறது. நாள் ஒன்றுக்கு 40 டன் காய்கறி விற்பனை வருகிறது.
ஈரோடு நகரில், நேதாஜி மார்கெட், பெரிய மார்க்கெட், சின்ன மார்க்கெட், உழவர் சந்தைகள், சூரம்பட்டி சந்தை மற்றும் தினசரி ரோட்டோர கடைகள், பழமுதிர் நிலையம், மளிகை கடைகளில் காய்கறி விற்பனை செய்யப்படுகிறது. கடந்த, 2012 துவக்கத்தில், காய்கறிகள் விலை உயரத்துவங்கியது. குறிப்பாக, கடந்த ஒரு மாதமாக, ஒட்டு மொத்த காய்கறிகளின் விலையும், கடுமையான விலையேற்றம் கண்டுள்ளது.
தக்காளி மற்றும் நாட்டு காய்கறிகளான வெண்டை, கத்தரி, புலங்காய், பீர்க்கங்காய் ஆகியவை வரத்தை கொண்டு, விலை ஏற்ற இறக்கம் கண்டு வந்தது. கேரட், பீன்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ் விலை உயர்ந்தது. முகூர்த்த மாதம், டீசல் விலை உயர்ந்து வாடகை உயர்ந்ததால், காய்கறிகளின் விலை அதிகரித்தாக கடைக்காரர்கள் கூறுகின்றனர்.
நேற்று, ஈரோடு மார்க்கெட்டில், கத்தரிக்காய் கிலோ, 25, பாகற்காய், 28, காரட், 45, பீன்ஸ், 55, உருளை, 24, பீட்ரூட், 35, முட்டைகோஸ், 45, முள்ளங்கி, 25, 700 கிராம் எடையுள்ள காலிஃபிளவர் பூ ஒன்று, 45 ரூபாய், முருங்கை காய் கிலோ, 70 (ஒன்று, 5 ரூபாய்), இஞ்சி, 35, பீர்க்கங்காய், 20, தட்டக்காய், 20, கொத்தவரை, 15, அவரைக்காய், 38, தக்காளி 15, பெரிய வெங்காயம், 16, சின்ன வெங்காயம், 28 முதல், 32 ரூபாய் வரையிலும், மல்லித்தழை ஒரு கட்டு, 35, நாட்டு மல்லி கட்டு, 25, கருவேப்பிலை கிலோ, 20, சுரைக்காய், 7 ரூபாய், கடந்த மாதம் கிலோ, 28 ரூபாய்க்கு விற்ற வெண்டைக்காய் கிலோ 5 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.
இரண்டு ஆண்டுக்கு மேலாக, கிலோ, 9 ரூபாயை தாண்டாத முட்டைகோஸ், ஒரு மாதமாக கிலோ, 45 ரூபாய்க்கும், மூன்று மாதம் முன், 1 கிலோ எடை கொண்ட காலிஃபிளவர் 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, 45 ரூபாய் முதல், 50 ரூபாய் வரையிலும் விற்கிறது. நாமக்கல் மாவட்டம் கொக்கராயன் பேட்டை, சேவூர் பகுதியில் இருந்து, கேரளாவுக்கு அனுப்பிய, மூன்று லோடு வெண்டைக்காய், கடந்த வாரம் பந்த் காரணமாக, திருப்பியதால், கிலோ 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**வேளாண் வணிகம் குறித்த தகவல்களை விவசாயிகள் அறிய புதிய பட்டறிவு பயணம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2012,03:17 IST

தூத்துக்குடி : விவசாயிகள் வேளாண்மை குறித்து புதிய தகவல்களை அறியும் பொருட்டு அதிகாரிகள் ஏற்பாட்டில் பட்டறிவு பயணம் சென்று வந்தனர்.
தமிழக அரசு வேளாண்மைத்துறையிலும், வேளாண் வணிகத்துறையிலும் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி கொண்டிருக்கிறது. கூடுதல் உணவு உற்பத்தி,

விளையும் பொருட்களை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக விவசாயிகளுக்கு பயிற்சி, முக்கிய இடங்களுக்கு விவசாயிகளை அழைத்து சென்று நேரடியாக பல தகவல்களை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு போன்றவை அரசால் இலவசமாக செய்யப்பட்டு வருகிறது.
இதன் ஒரு அங்கமாக தூத்துக்குடி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பட்டறிவு பயணம் மேற்கொள்ளப்பட்டது.
பட்டறிவு பயணத்தில் ஸ்ரீவைகுண்டம் வட்டார விளைபொருள் உற்பத்தியாளர் குழு விவசாயிகள் கலந்து கொண்டு ஸ்ரீவைகுண்டம் ஒழுங்குமுறை விற்பனை கூடம், கிள்ளிகுளம் விதை சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டனர்.
பின்னர் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் உதவி பேராசிரியர் செந்தில்நாதன் விளைபொருட்களை சந்தைப்படுத்தும் முறைகளை விவசாயிகளுக்கு விளக்கினார்.அதன் பின்னர் வாகைக்குள் ஸ்கேடு வேளாண் அறிவியல் மையத்தில் கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தும் தொழில் நுட்பத்தை டாக்டர் ஸ்ரீனிவாசன் விரிவாக எடுத்துரைத்தார்.
தூத்துக்குடி ஒழுங்குமுறை விற்பனை கூடம் உயிர் உரம் உற்பத்தி நிலையம், நிலா குளிர்பதன கிட்டங்கியை விவசாயிகள் பார்வையிட்டனர். குளிர்பதன கிடங்கில் விளை பொருட்களை சேமித்து வைக்கும் முறைகள் மற்றும் அதன் பயன்கள் பற்றி மேலாளர் ஜேம்ஸ் விளக்கமாக எடுத்துரைத்தார்.
பட்டறிவு பயண ஏற்பாடுகளை தூத்துக்குடி வேளாண் வணிகத்துறை வேளாண்மை அதிகாரி ராஜா செய்திருந்தார். பத்மாநாபமங்கல் குழுத் தலைவர் முத்துசாமி, பொன்னங்குறிச்சி குழுத் தலைவர் அருணாசலம், ஸ்ரீவைகுண்டம் குழுத் தலைவர் தாமஸ், பொன்ராஜ், உதவி வேளாண்மை அலுவலர் பாலுச்சாமி மற்றும் பலர் பங்கேற்றனர்.
பட்டறிவு பயணம் மூலம் தங்களுக்கு பல்வேறு புதிய தகவல்கள் தங்களுக்கு கிடைத்துள்ளதாகவும், இந்த பயணம் தங்களின் விவசாய பணிகளுக்கு உதவியாக இருக்கும் என்றும் வேளாண்மை அலுவலர் ராஜாவிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.